# சிவகங்கை நகராட்சி
# சாதாரண கூட்டம்
# மன்றப்பொருள்கள்
# டிசம்பர் மாதம் :31.12.2020

**1.**இந்நகராட்சிக்கு சொந்தமான கீழே குறிப்பிட பட்டுள்ள குத்தகை இனஙகளில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமைக்கான அரசு ஆணை எண்:181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை நாள்: 19.0.,2008–ன் படி 2021–2022, 2022–2023, 2023–2024 ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி முறையில் குத்தகைக்கு விட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் 2021–2022 ஏலத்தின் மூலம் அல்லது ஒப்பந்தப்புள்ளியின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையுடன் இரண்டாம் ஆண்டில் (2022–2023) 5% குத்தகை உயர்வும் மூன்றாம் ஆண்டில் (2023–2024) 5% குத்தகை உயர்வும் செய்தும் குத்தகை தொகையை நிர்ணயம் செய்யப்படும்.

**01.04.2021 முதல் அல்லது ஒப்புவிக்கும் நாள் முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்து கொள்ளும் உரிமை**

| வ. எண் | குத்தகை இனம் | உரிமையாணைக்காலம் | ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் தொகை | கூடுதல் டெபாசிட் தொகை | மின் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | வாரச்சந்தையில் கால்நடை, காய்கறி, மற்றும் இதர பொருட்கள் ஆகியவற்றிற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். ( வாரச்சந்தை இடத்தில் உள்ள நிரந்தர கடைகள் நீஙகலாக) | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 10,00,000 | 10,00,000 | 2000 |
| 2. | தினசரி சந்தை மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள 61 ஸ்டால்கள் 11 கடைகள் ஆகியவற்றில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 5,00,000 | 5,00,000 | 2000 |
| 3. | நகராட்சி எல்லைக்குள் சாலையோரஙகளில் தற்காலிகமாக தினசரி சாமான்கள் பரப்பி வைத்து பொதுமக்களுக்கோ அல்லது காவல்துறையினருக்கோ இடைஞ்சல் இல்லாது ஒழுஙகுபடுத்தி விற்பவர்களிடமிருந்து 1920ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 270வது பிரிவின் கீழ் தினசரி | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 | 5,00,000 | 5,00,000 | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | வரை | | | |
| 4. | நகராட்சி ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 1,50,000 | 1,50,000 | 2000 |
| 5. | பேருந்துநிலையத்தில் பேருந்து நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 2,00,000 | 2,00,000 | – |
| 6. | பேருந்துநிலையம் மேற்குப் பகுதியில் இருசக்கர வாகன கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 2,50,000 | 2,50,000 | 2000 |
| 7. | பேருந்துநிலையத்தில் தட்டுகளில் முருக்கு மற்றும் திண்பண்டஙகள் கூவி விற்பனை செய்தல் மற்றும் கடலை தள்ளுவண்டிகள் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 1,00,000 | 1,00,000 | – |
| 8. | தெப்பக்குளம் அருகில் காமராஜர் சிலை பின்புறம் அமைய உள்ள இரசக்கர வாகன காப்பகம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 1,00,000 | 1,00,000 | 2000 |
| 9. | பேருந்து நிலையத்தில் மேற்கு பக்கம் பூக்கள் மற்றும் மலர் மாலைகள் விற்பனை செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 1,00,000 | 1,00,000 | – |
| 10. | பேருந்து நிலையத்தில் கிழக்கு பக்கம் பூக்கள் மற்றும் மலர் மாலைகள் விற்பனை செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 1,00,000 | 1,00,000 | – |
| 11. | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஊரணிகளில் மீன் பிடித்துக்கொள்ளும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 1,50,000 | 1,50,000 | – |
| 12. | காந்திவீதி பெண்கள் மருத்துவமனை அருகில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 20,000 | 20,000 | 2000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | வாரச்சந்தை வளாகத்தில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 20,000 | 20,000 | 2000 |
| 14. | செக்கடி ஊரணி அருகில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 20,000 | 20,000 | 2000 |
| 15. | தொண்டி ரோடு ஆத்தா ஊரணி கரை கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 10,000 | 10,000 | 2000 |
| 16. | RDM கல்லூரி சாலை பாரதி தெருவில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 10,000 | 10,000 | 2000 |
| 17. | அம்பேத்கார் தெருவில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 10,000 | 10,000 | 2000 |
| 18. | மதுரைரோடு சுண்ணாம்பு காலவாசலில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வவரை | 20,000 | 20,000 | 2000 |
| 19. | திருப்பத்துார் ரோடு வடக்கு மயானம் அருகில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 20,000 | 20,000 | 2000 |
| 20. | குண்டுரேணி அருகில் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 10,000 | 10,000 | 2000 |
| 21. | தெப்பக்குளம் காமராஜர் சிலை அருகில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 20,000 | 20,000 | 2000 |
| 22. | உழவர் சந்தையில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 20,000 | 20,000 | 2000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23. | மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம் மற்றும் தீயணைப்பு நிலையம் எதிரில் உள்ள கழிப்பறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 10,000 | 10,000 | 2000 |
| 24. | வாரச்சந்தை நடைபெறும் இடத்தில் உள்ள MUDF திட்டத்தில் கட்டப்பட்டுள்ள RCC 10X8 அளவுள்ள 15 கடைகளுக்கு தனித்தனியாக குத்தகை அனுபவிக்கும் உரிமம். | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை | 40,000 (கடை ஒன்றுக்கு) | 30,000 (கடை ஒன்றுக்கு) | 2,000 (கடை ஒன்றுக்கு) |

**அலுவலகக்குறிப்பு:**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :263. அனுமதிக்கப்பட்டது**

2. இந்நகராட்சியில் கீழ்காணும் பணிகளுக்காக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து பணி கிடைக்கப்பெற்று முடிக்கப்பட்டுள்ளது. பணி முடிவில் வரப்பெற்ற பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ரூ.31894/—ஐ ஒப்பந்ததாரர் திருமதி T.செண்பகவள்ளி என்பவர் வழங்க கோரியுள்ளார். மேற்படி வைப்புத் தொகையானது காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | Special Repair works in the existing pay and use toilet at Bus stand | Rs.8750/- |
| 2. | Construction of storm water Drain Ambethkar Street Slum area | Rs.13000/- |
| 3. | Construction of storm water Drain Ambethkar Street Slum area | Rs.10144/- |
| | | **Rs.31894/-** |

ந.க.எண்.. 990/2020/இ1

**அலுவலகக்குறிப்பு :** அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :264. அனுமதிக்கப்பட்டது**

3. இந்நகராட்சியில் பணி ஆய்வாளராக பணிபுரியும் திரு.அ.சசிக்குமார் தனது பெயரை பணிமூப்புப் பட்டியலில் சேர்க்காததை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் பிரதிவாதிகளாக (1) செயலாளர் நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை சென்னை (2) நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை (3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை (4) ஆணையாளர் சிவகஙகை நகராட்சி (5) ஆணையாளர் மேலூர் நகராட்சி ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்து தொகுக்கப்பட்ட வழக்கு எண் டபிள்யூ பி எண் 13682/2019 எண்ணிட்ட வழக்கில் வக்காலத்து படிவம் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கிற்கு தேவையான பத்தி வாரி அறிக்கை நகராட்சி வழக்கறிஞர் மூலம்

தயார் செய்யப்பட்டது. பத்திவாரி அறிக்கையில் அரசு வழக்கறிஞரின் கையொப்பம் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்க சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.J.லாரன்ஸ் அவர்களின் 25.03.2019ம் தேதிய கடிதத்தின் படியும், 11.12.2020ம் தொலைபேசி செய்தியின் படியும் வழக்குக் கட்டணம் ரூ.12500/– (பனிரெண்டாயிரத்து ஐநூறு) மட்டும் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :265. அனுமதிக்கப்பட்டது**

4. சிவகங்கை நகராட்சியில் திட்டப்பணிகளை கண்காணித்து வர ஒரு தொழிநுட்ப பணியாளரை ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி பணியாளராக பணியமர்த்த ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/–த்திற்கு 18.11.2020ம் தேத தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு முதன்முறையாக 08.12.2020 தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு.எம்.கண்ணன், ஒப்பந்ததாரர், சிவகஙகை | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2. | திரு.பி.முருகன், ஒப்பந்ததாரர், சிவகஙகை | 0.32% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :266. அனுமதிக்கப்பட்டது**

5. சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை சாலை அருகில், சிவகஙகை சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–20ன் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறு அமைத்து புதிய மோட்டார் பொருத்தும் பணிக்கு 24.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வை மற்றும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு.M.நாட்டரசன், ஒப்பந்ததாரர், சிவகஙகை | 0.01%மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | திரு.பி.முருகன், ஒப்பந்ததாரர், சிவகஙகை | 3.69%மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :267. அனுமதிக்கப்பட்டது**

6. இந்நகராட்சி எல்லைப் பகுதியில் சாலையோரஙகளில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழஙகுவது சம்மந்தமாக இராமநாதபுரம் பசும்பொன் முத்துராமலிஙகம் மாவட்ட பொது தொழிலாளர்கள் சஙகம் சார்பாக அதன் தலைவர் திரு.வீரய்யா என்பவர் மருத்துவ கல்லூரி முன்பாக சாலையோரம் வியாபாரம் செய்த 15 வியாபாரிகளின் கடைகளை 2018ம் ஆண்டு நடத்தப்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றும் கடைகளை அப்புறப்படுத்தியதாகவும், மேற்படி 15 வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழஙக கோரி சென்னை உயர்நீத் மன்றம் மதுரை கிளையில் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண் (எம்.டி) எண் 664.2018ல் சிவகஙகை மாவட்ட ஆட்சியர் அவர்களை பிரதிநிதியாக சேர்க்கப்பட்ட வழக்கு தொடர்ந்த 15 சாலையோர வியாபாரிகளுக்கு உடன் அடையாள அட்டை வழஙக புதுவாழ்வு டிரஸ்ட் சிவகஙகை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழஙகப்பட்டது. அதன் உத்தரவு நகல் சென்னை உயர்நீதிமன்ற அரசு சிறப்பு வழக்கஞர் திரு.சண்முகநாதன் அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.2143/2014/எப்1 நாள் 19.11.2020ம் தேதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சட்டம்) அவர்கள் தொலைபேசி செய்தியில் பெறப்பட்ட தகவலின் பேரில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை ரத்து செய்ய வழக்கு கட்டணம் ரூ.6000/—(ஆறாயிரம்) மட்டும் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண் :268. அனுமதிக்கப்பட்டது**

7.சிவகஙகை மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04.12.2020 அன்று கொரானா ஆய்வுக்கூட்டம் மேற்கொள்ள வருகை தர இருப்பதை முன்னிட்டு இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் பதினான்கு பூஙகாக்களில் உள்ள புதர் செடிகள் மற்றும் புல் அகற்றுவதற்கு தேவையான Brush Cutter & Scissor இயந்திரஙகள் தலா 2 எண்ணம் கொள்முதல் செய்யவும், அதற்கு குறுகிய கால விலைப்புள்ளி கோரவும், கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண் :269. அனுமதிக்கப்பட்டது**

8. இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் பூஙகாக்களில் உள்ள புதர் செடிகள் மற்றும் புல் அகற்றுவதற்கு தேவையான Brush Cutter & Scissor இயந்திரஙகள் தலா 2 எண்ணம் கொள்முதல் செய்ய குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் 30.11.2020 அன்று கீழ்கண்ட நிறுவனஙகளிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தேவையான பொருட்கள் (2 எண்ணம்) | கொள்முதல் விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.M.கண்ணன், முதல்நிலை ஒப்பந்தகாரர், 1680A, ஆரிய பவன் நகர், | Brush Cutter | 140000 |

| | | | |
|---|---|---|---|
| | சிவகஙகை. | Scissor | 3600 |
| 2 | திரு.B.முருகன்,<br>நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>சிவகஙகை. | Brush Cutter | 144000 |
| | | Scissor | 4000 |
| 3 | திரு.P.முருகன்<br>ஒப்பந்தகாரர்,<br>சிவகஙகை. | Brush Cutter | 150000 |
| | | Scissor | 4400 |

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு.M.கண்ணன், முதல்நிலை ஒப்பந்தகாரர், 1680A, ஆரிய பவன் நகர், சிவகஙகை. அவர்களுக்கு விநியோக உத்தரவு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :270. அனுமதிக்கப்பட்டது**

**9.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை காரணமாக மழைநீர் தேஙகக்கூடிய இடஙகளில் கொசு உற்பத்தியாகி டெஙகு மலேரியா போன்ற நோய்கள் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் நோய்கள் பரவாமல் தடுக்க போர்கால அடிப்படையில் கூடுதலாக பணி மேற்கொள்ள ஜே.சி.பி வாகனத்தை வாடகைக்கு அமர்த்தவும், அதற்கு ஆகும் உத்ததேச செலவினத் தொகை ரூ.1,00,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :271. அனுமதிக்கப்பட்டது**

**10.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை காரணமாக மழைநீர் தேஙகக்கூடிய இடஙகளில் கொசு உற்பத்தியாகி டெஙகு மலேரியா போன்ற நோய்கள் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் நோய்கள் பரவாமல் தடுக்க போர்கால அடிப்படையில் கூடுதலாக பணி மேற்கொள்ள ஜே.சி.பி வாகனத்தை வாடகைக்கு அமர்த்த குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் 18.11.2020 அன்று கீழ்கண்ட நிறுவனஙகளிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஜேசிபி ஒரு மணி நேரத்திற்கு வாடகை | டிரைவர் கூலி |
|---|---|---|---|
| 1 | Sri Balaji Earth Movers,<br>88, Railway Station Road,<br>Sivagangai. | 900 | 500 |

| | | | |
|---|---|---|---|
| 2 | Vimal Earth Movers, Sivagangai. | 950 | 600 |
| 3 | Guru Earth Movers, Sivagangai. | 925 | 600 |

மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி அளித்த Sri Balaji Earth Movers, 88, Railway Station Road, Sivagangai. அவர்களுக்கு விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :272. அனுமதிக்கப்பட்டது**

**11.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முடித்திருத்தம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் **15.12.2020**ம் தேதிய சுற்றறிக்கையின் படி முப்பது நாட்களுக்குள் இவ்வலுவலகத்தில் தொழில் உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டிய விபரத்தினை மாவட்ட அளவில் தினசரி தமிழ் மற்றும் ஆஙகில நாளிதழில் சிறிய அளவில் விளம்பரம் செய்யவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.**30,000/–**(முப்பதாயிரம் மட்டும்) க்கும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :273. அனுமதிக்கப்பட்டது**

**12.** சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட திறந்தவெளி மலம் கழிப்பிடமற்ற (ODPT) நகரமாக அறிவித்தல் தொடர்பான விபத்தினை தினதந்தி நாளிதழில் **04.11.2020** அன்று பிரசுரம் செய்ததற்கான பட்டியல் தினதந்தி நாளிதழிருந்து வரப்பெற்றுள்ளது. எனவே பட்டியல் தொகை ரூ.,**5166/–**ம் தினதந்தி நாளிதழிலுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண் :274. அனுமதிக்கப்பட்டது**

**13.**சிவகங்கை நகராட்சியில் தினசரி **18** மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகின்ற அதில் தரம் பிரிக்கப்பட்ட **8.8** மெட்ரிக் டன் அளவிலான மக்கும் குப்பைகள் (Bio degradable Waste) நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 3 எண்ணிக்கையிலான பசுமை உரக்குடில் (Micro Composting centre)மற்றும் 14 எண்ணிக்கையிலான சிறிய வகை உரக்குடிலிகள் மூலமாக (Onsite Composting centre) கையாளப்பட்டு உரமாக்கப்படுகின்றன. இது தவிர சுமார் 4 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகள் மறு சுழற்சி அடிப்படையில் பயன்படுத்தத்தக்க உலர் கழிவுகள் (Recyclable dry waste) பிரித்தெடுக்கப்பட்டு மறு சுழற்சி செய்வதற்காக விற்பனை செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், மறு சுழற்சிக்கு பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத ( Non Saleable Dry Waste) சுமார் 2.9 மெட்ரிக் அளவுள்ள டன் உலர் கழிவுகள் எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டி M/S./Dalmia. சிமிட் ஆலைக்கு அனுப்பபட்டு வருகிறது. மேற்படி நகராட்சியால் அனுப்பப்பட்டுவரும் குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்த இயலாதவை, ஈரமாக உள்ளது மற்றும் மேற்படி உலர் கழிவுகளை வாங்க மறுக்கும் நிலையில் மறுபடியும் குப்பைக் கிடங்கிலேயே மீண்டும் சேகரம் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது தவிர நகரை விட்டு வெகு தூரத்தில் அமைந்துள்ள மேற்படி தனியார் சிமெண்ட் ஆலைக்கு பயன்படுத்த இயலாத விற்பனை செய்ய இயலாத உலர் கழிவுகளை கொண்டு செல்ல லாரி வாடகையாக ஒரு டன்னுக்கு சுமார் ரூ.5000/– வரை செலவிட நேர்வதால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகின்றது. மேற்படி பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Salable Dry Waste) உலர் கழிவுகளை சிமெண்ட் ஆலைக்கு கொண்டு சென்று எரியூட்டுவதற்குப் பதிலாக நகராட்சி மூலம் புதிதாக எரியூட்டுவதற்கு பதலாக நகராட்சி மூலம் புதிதாக எரியூட்டும் உலை நிறுவி மேற்படி குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் கையாள ( Dry Waste Incinerator ) வேண்டிய நிலை உள்ளது. மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் தொகை செலவிட நிடும் என்பதால் கையாள புதிதாக தினசரி 10 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும ஆலை ( Dry Waste Incinerator ) சிவகங்கை நகராட்சியில் அமைக்கவும் மேற்படி திட்டத்தினை தனியார் பங்களிப்பு (Public Private)முறையில் செயல்படுத்தவும் அதற்கான திட்ட மதிப்பீடு ரூ.142.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் மனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், செலவினத்தை கீழ்க்கண்ட வகையில் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **நகராட்சியின் பெயர்** | **திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | சிவகங்கை | 142.00 |
| | **மொத்தம்** | **142.00** |

மேலும் மேற்படி எரியூட்டு உலை நிறுவி உலையை இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை சிவகங்கை நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும், மேற்படி மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை விதாச்சார முறையில் பகிர்ந்து செலுத்தி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண் :275. அனுமதிக்கப்பட்டது**

**தனி அலுவலர்**
**சிவகங்கை நகராட்சி.**